**ஏறாவூர் நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 19 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 Vg;uy; 21 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 19 திகதி நகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஏறாவூர் நகர சபை இன் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமா்ப்பிக்கப்படடிருந்த போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிராகரம் அது முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா.36,000 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் பொது நூலகத்தில் காணப்பட்ட 1400 புத்தகங்கள் 2010 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால் முற்றாக அழிக்கப்பட்டிருந்தும் அவை ஏடுகளிலிருந்து பதிவளிக்கப்படாமல் உள்ளதினால் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.3 பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா.181,871 கடன் மீதி 2010 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றினை மரண பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா.3,008,425 தொகையான முற்பணங்கள் 15 ஆண்டுகளாக தீர்த்து வைக்கப்படாமலும் அவற்றினை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமலும் பதினொரு ஆண்டுகளாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

**1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணி கட்டிடங்கள் | 85,687,786 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித்தொகுதி இயந்திரங்கள் | 4,107,929 | மெய்மையாய்வு அறிக்கைகள் |
| தளபாடம் பொருத்துகள் | 2,999,175 | |
| கணனி | 525,800 | |

**1.3.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| நகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255) | |
| (i) பிரிவு 177(2) | 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கம் பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 180(1) | ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் அந் நிதியாண்டிற்கான நிர்வாக அறிக்கையை சபைத் தவிசாளர் விபரமாக தயாரித்தல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான அறிக்கை மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா.402,649 ஆகும். இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.2,881,587 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.3,284,236 வீழ்ச்சியை காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றுக்கிடையில் குறிப்பிடப்பட்ட வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | அறவிடப் பட்டது | வேறுபாடு | சத வீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வீத வரிகள் | 2,243,000 | 1,898,781 | 344,219 | 15 |
| குத்தகை | 1,500,000 | 1,295,036 | 103,700 | 13 |
| வாடகை | 500,000 | 230,150 | 269,850 | 53 |

#### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160ஆம் பிரிவுக்கு அமைய, நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை ரூபா.9,550,217 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 பொதுச்சந்தை கடை வாடகை

பொதுச் சந்தையின் 40 கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து 2008 முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள ரூபா.3,781,815 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 கசாப்புக் கடை வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் குத்தகை

கசாப்புக் கடைகளுக்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்களை முழுமையாக குறித்த வருடத்தில் செலுத்தி முடிக்காத மூன்று நபர்களுக்கு தொடர்ச்சியாக 05 வருடங்கள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை காரணமாக 2010 தொடக்கம் 2014 வரையான ஆண்டுகளில் அறவிட வேண்டிய நிலுவை ரூபா.540,315 ஆகக் காணப்பட்டது.

### 2.2.5 படமாளிகை வரி

ஒரு படமாளிகையிலிருந்து 2010 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டிய கேளிக்கை வரி நிலுவை ரூபா.860,961 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் பிரதி தவிசாளரின் வதிவிட தொலைபேசி கட்டணத்தை மீளளிப்புச் செய்யும் உச்ச எல்லை ரூபா.3,000 ஆக இருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டில் மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா.12,466 தொகையையும் மீளாய்வாண்டில் மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா.8,307 தொகையையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 1995 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ஊழியர்களின் ஓய்வூதியத்திட்டத்திற்காக ரூபா.2,777,757 தொகையான பங்களிப்பு பணத்தை செலுத்த வேண்யிருந்த போதிலும் அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்ப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டு பிரதேச சபைகள் உருவாகுவதற்கு முன்பு பட்டினாட்சி மன்றமாக செயற்பட்ட காலத்தில் இலங்கை மின்சார சபை சார்பாக மின்சாரம் பொது மக்களுக்கு வழங்கப்பபடிருந்தது. எவ்வாறாயினும், 1988 ஆம் ஆண்டிலிருந்து இவ்வறிக்கைத் திகதி வரை மின்சாரம் வழங்கிய வகையால் பாவனையாளர்களிடமிருந்து ரூபா.786,122 மின்சார கட்டணத்தை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான உழவு இயந்திரம் விபத்துக்குள்ளாகி சபைக்கு ரூபா.29,300 நட்டம் ஏற்பட்ட போதிலும் நி.பி 102 மற்றும் 104 இன் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 1971 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டில் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டத்தின் பிரகாரம் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 32 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகளுக்கான பங்களிப்புத் தொகை ரூபா.384,449 உரிய நிறுவனங்களுக்கு சபையால் இத் திகதிவரை செலுத்தப்படிரக்கவில்லை.

(ஊ) 2007 முதல் 2013 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள பெண் சந்தை கடை வாடகைப் பணமாகிய ரூபா.150,510 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

முன்னாள் ஜனாதிபதியின் 69 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கான வாழ்த்துச் செய்தியை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு சபை நிதியிலிருந்து ரூபா.22,000 செலவு செய்யப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

சபையினால் மீளாய்வாண்டில் நாட்சம்பள அடிப்படையில் 40 அலுவலக பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இது தொடர்பாக, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆட்சேர்ப்புத் திட்டத்தில் (Scheme of Recruitment) பிரிவு 8.4 இன் பிரகாரம், ஆட்சேர்ப்புத் நடைமுறைகளை பின்பற்றாது இந்நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பந்தி 03 இன் பிரகாரம், நியமன அதிகாரி உள்ளூராட்சி அமைச்சின் (கிழக்கு மாகாணம்) செயலாளராக இருந்த போதிலும், இந் நியமனங்கள் சபையின் செயலாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சம்பளமாக ரூபா.7.833 மில்லியன் 2014 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்தது

(iii) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான அலுவலக பணியாளர்களுக்கு 08 வெற்றிடங்கள் மாத்திரமே இருந்த போதிலும் அப்பதவிகளுக்கு 40 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படடிருந்தனர்.

# 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 58% தொடக்கம் 95% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

# 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந் நிாவாகம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு